O.S.42/2019
PW3 – வீரமுருகன்
நாள் 10.03.2026, 01.20 P.M.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.டெக் சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். காண்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறேன். ஆரம்பத்தில் இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு என்ன காரணத்திற்காக வாபஸ் பெற்று பின்னர் தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் உள்ளிட்ட பல சொத்துக்கள் ஆதியில் சாயல்குடி ஜமீன்தார் திரு.அண்ணாச்சாமியின் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சாயல்குடி கிராமத்திலுள்ள பெரும்பாலான சொத்துக்கள் ஜமீன்தாரருக்கு பாத்தியமானது என்றால் சரிதான. மேற்படி பெரிய ஜமீன்தார் அண்ணாசாமிபாண்டியனுக்கு சிவஞானபாண்டியன் தான் வாரிசு என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி சிவஞானபாண்டியன் யார் என்றால் அண்ணாசாமிபாண்டியன் என்பவரின் மகன் ஆவார்.

2. பெரிய ஜமீன்தார் அண்ணாசாமி பாண்டியனுக்கும், அவருடைய மகனான சிவஞானபாண்டியன் என்பவருக்கும் அரண்மனை சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அரண்மனை சொத்தில் சிவஞானபாண்டியனுக்கு பாதி சொத்து உள்ளதாக தீர்ப்பான விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த தீர்ப்பின் அடிப்படையில் சொத்துக்களை இருவரும் சமமாக வாய்மொழியாக பிரித்துகொண்டார்கள் என்றால் சரிதான். ஒரு சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்னர் அந்தசொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது அந்த சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரங்களை பார்த்து தான் கிரயம் வாங்குவார்கள் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை வாதிகள் கிரையம் வாங்கும்போது பட்டா யார்

பெயரில் உள்ளது என்று பார்த்து தான் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் வாங்கும்போது யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் எஸ்.எல்.ஆர் மற்றும் யு.டி.ஆரில் அண்ணாசாமி பாண்டியன் பேரில் தான் பட்டா இருந்தது.

3. அந்த பட்டாக்களை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். யு.டி.ஆரில் எத்தனை நபர்களின் பெயரில் பட்டா இருந்தது என்றால் அண்ணாசாமி பாண்டியன் பேரில் தான் பட்டா இருந்தது. தாவா சொத்தின் நான்குமால் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூல அபிடவிட்டில் கிரையம் மற்றும் அடமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் வேலுச்சாமி. 02.07.2004 ம் வருடம் எனது தகப்பனார் 2ம் வாதி ராஜாத்தி மற்றும் அஞ்சலி தேவி என்பவர் பேரில் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அடமானப்பத்திரத்தில் தாவா சொத்தின் தெற்கே உள்ள சொத்து என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் தெற்கு நான்குமாலாக அஞ்சலி தேவியின் சொத்தை குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 06.09.1999ல் அண்ணாசாமி பாண்டியன் தனலெட்சுமிக்கு கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தனாது தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. மேற்படி விவரத்தை தாவா சொத்தின் விவரங்களை நான்குமால்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் அந்த சமயத்தில் அண்ணாசாமிபாண்டியன் பேரில் சொத்து இருந்ததால் அவரது பெயரில் நான்குமால்கள் காட்டப்பட்டுள்ளது.

4. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தெற்கு பக்கத்தில் சொத்து விவரத்தில் தனலெட்சுமி என்பவர் பெயரில் இல்லை என்றாலும், சண்முகராஜ், 2ம் வாதி, சுப்பிரமணியன், ராமகிருஷ்ணன் ஆகியோர் பெயரில் இல்லை என்றால் சரிதான். தனலெட்சுமி என்பவரின் கணவர்

பெயரான சுப்பிரமணியனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 06.09.1999ம் தேதி கிரைய ஆவணத்தில் வடிவேல், ராமகிருஷ்ணன் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது சொத்து விவரத்தில் வடிவேல் என்பவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ராமகிருஷ்ணன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பட்டா யார் பெயரில் தற்போது தாக்கலாகி வருகிறது என்றால் நித்தியலெட்சுமி என்பவர் பெயரில் உள்ளது. நித்தியலெட்சுமி யார் என்றால் 1ம் பிரதிவாதியின் மகள், 2ம் பிரதிவாதியின் சகோதரி ஆவார். அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மூலம் மோசடியாக ஆவணம் பதிவு செய்து நித்தியலெட்சுமி என்வர்பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. நித்தியலெட்சுமி பெயரில் ஆவணம் மற்றும் பட்டா உள்ளதால் அவரையும் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்திருக்க வேண்டும் என்றால் வழக்கு தாக்கல்செய்யும் போது அவருடைய பெயரில் பட்டா இல்லை. வழக்கு நடந்துகொண்டிருக்கும் போது அவருடைய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. இந்த விவரங்களை முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தவா சொத்திற்கும் 1,2 பிரதிவாதிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் காலத்தில் பெரிய ஜமீன்தார் உடல் நலக்குறைவாக இருந்தார் என்றால் சரிதான். அவர் வயோதிகத்தின் காரணத்தினால் நினைவாற்றல் குறைவாக இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. தாவ சொத்திா ஒரு போதும் நாங்கள் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. செய்தோம். தாவா சொத்தில் அனுபவத்தை நிரூபிக்கும் விதமாக ஆவணங்கள் ஏதையாது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரையம் பெற்ற காலத்திலே சொத்தின் மதிப்பு ரூ.3,48,800/- என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கை விசாரிக்கும் அதிகாரம்

சமூகம் நீதிமன்றத்திற்கு இல்லை என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கில் 3ம் வாதி ருக்குமணி என்பவர் எனது தாயார். அவருக்கு 1ம் வாதி உயில் ஆவணம் மூலம் தாவா சொத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் தாவா சொத்து உட்பட மொத்த சொத்தில் 5 ஏக்கர் 86 சென்ட்க்கான சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணத்திலும் தாவா சொத்தை வழக்கில் காண்பிக்கக்கூடிய நான்குமால்களை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து உட்பட மொத்த சொத்தும் 3ம் பிரதிவாதியான இளைய ஜமீன்தாரரான சிவானபாண்டியனுக்கு தான் கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல. பெரிய ஜமீன்தார் மூலம் வாதிகள் எழுதி வாங்கிய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் சேர்ந்து கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 3ம் வாதியின் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.04 16:52:36 +0530